பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 04 2025 | 6 30 | செய்தி ஆசிரியர்
வியாழக்கிழமை | மாலை | **J.K/S.K.**

வணக்கம் - மாநிலச் செய்திகள் - வாசிப்பவர் - வடிவழகி கபிலன்

தலைப்புச் செய்திகள்

1. தாய்லாந்து உடனான வர்த்தகத்தை பரஸ்பரம் மேம்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வக்ஃப் மசோதா விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகே கொண்டு வரப்பட்டுள்ளதாக சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

3. கச்சத்தீவை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலகக்கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியாவின் **Manish Rathore, Abhinash Jamwal** மற்றும் **Hitesh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

03 04 25 | 6 30 | மோடி – தாய்லாந்து

தாய்லாந்துடனான வர்த்தகத்தை பரஸ்பரம் மேம்படுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக தாய்லாந்து சென்றுள்ள அவர், அந்நாட்டுப் பிரதமர் **Paetongtarn Shinawatra**-வுடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(சவுண்ட் பைட் - மோடி – 63 நொடிகள்)

கார். – ஹா                                                  ஏர்நெட் - 20

03 04 25 6 30 கிரன் ரிஜிஜு - வக்ஃப்

வக்ஃப் திருத்த மசோதா இஸ்லாமியர் நலனுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டுகளை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜு திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இந்த மசோதாவை தாக்கல் செய்து அவர் பேசினார்.

வக்ஃப் வாரிய விவகாரங்களில் இஸ்லாமியர் அல்லாதவரின் தலையீட்டுக்கு இடமில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

எந்தவொரு இஸ்லாமியரும் அறக்கட்டளை மூலம் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்த மசோதா விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகே கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதிலும் இருந்து இந்த மசோதா தொடர்பாக 97 லட்சத்திற்கும் மேற்பட்ட பரிந்துரைகள் பெறப்பட்டதாகவும் திரு. கிரன் ரிஜிஜு தெரிவித்தார்.

கார். — ஹா ஏர்நெட் - 11

03 04 25 6 30 சிராக் பஸ்வான் - வக்ஃப்

வக்ஃப் மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களைப் பரப்பி வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். ஏழை இஸ்லாமியர் மற்றும் மகளிர் நலனைக் கருத்தில் கொண்டே இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வக்ஃப் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யவும் இந்த மசோதா உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கார். — ஹா ஏர்நெட் - 6

03 04 25 6 30 அண்ணாமலை — குற்றச்சாட்டு

வாக்கு வங்கி அரசியலைக் கருத்தில்கொண்டே வக்ஃப் திருத்த மசோதாவுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு சட்டப்பேரவையை முதலமைச்சர் பயன்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலைக் கருத்தில் கொண்டு திமுக இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் திரு. அண்ணாமலை குறை கூறியுள்ளார்.

கார். — ஹா செ.கு. — 8

03 04 25 6 30 சுரேஷ் கோபி — மக்களவை

இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின்கீழ் 10 கோடிக்கும் கூடுதலான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், சமையல் எரிவாயு வினியோகம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஊரக பகுதிகளில் சமையல் எரிவாயு பயன்பாட்டை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் திரு. சுரேஷ் கோபி பட்டியலிட்டார்.

கார். — ஹா ஏர்நெட் - 8

03 04 25 6 30 ஸ்டாலின் - கடிதம்

கச்சத்தீவை மீட்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில், அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிரந்தரமாக பாதுகாக்க நடவடிக்கை அவசியமாகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் இது தொடர்பாக அந்நாட்டு அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

கார். — ஹா செ.கு — 10

03 04 25 6 30 ராமதாசு — அறிக்கை

கச்சத்தீவை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இலங்கையில் மேற்கொள்ள உள்ள அரசுமுறைப் பயணத்தின்போது அந்நாட்டு அதிபரிடம் இதுகுறித்து பிரதமர் பேச்சு நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இடைக்கால ஏற்பாடாக கச்சத்தீவில் மீன்பிடிக்க இலங்கை அரசிடம் அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்றும் திரு. ராமதாசு கேட்டுக்கொண்டார்.

கார். — ஹா செ.கு — 8

03 04 25 6 30 கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

கல்லூரிகளில் இளங்கலைப் பாடத்திட்டத்தின் ஒருபகுதியாக பேரிடர் மேலாண்மை குறித்த பாடம் அறிமுகப்படுத்தப்படும் என்று மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

பள்ளிகளில் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள பேரிடர் மேலாண்மை பாடத்திட்டம் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

செங்கல்பட்டு, சேலம், கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும் என்றும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறினார்.

கார். — ஹா செ.கு — 10

03 04 25 6 30 உதகை - இ-பாஸ்

உதகமண்டலம் மற்றும் கொடைக்கானலில் இ-பாஸ் முறையை அமல்படுத்த பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக்கோரி தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

இம்மனு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கார். — ஹா ஆனந்த் - 4

03 04 25 6 30 துறைமுகம் - சுனில்பாலிவால்

சென்னை துறைமுகம் மற்றும் காமராஜர் துறைமுகம் தலா ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டியுள்ளதாக சென்னை துறைமுக ஆணையத்தின் தலைவர் திரு. சுனில் பாலிவால் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்குகளை கையாள்வதிலும் இந்த இரண்டு துறைமுகங்களும் சாதனை படைத்து வருவதாகத் தெரிவித்தார்.

கார். — ஹா செ.கு — 5

03 04 2025 6 30 மழை - வானிலை

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(வாய்ஸ் பைட் - செந்தாமரைக்கண்ணன் - 44 நொடிகள்)

கார் - சி டெஸ்க் - 14

*மாவட்டச் செய்திகள்*

தென்காசி காசி விஸ்வநாதர் கோவில் கும்பாபிஷேக விழாவை நடத்துவதற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இடைக்கால தடை விதித்துள்ளது.

-செந்தில்

மதுரை மாவட்டம் பெருங்காமநல்லூரில் உள்ள வீர தியாகிகள் நினைவு மண்டபத்தில் ஆட்சியர் திருமதி சங்கீதா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

-ரகுராஜா

ராணிப்பேட்டை — சேலம் இடையே நாளை முதல் மின்சார விரைவு ரயில் மீண்டும் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

-சுமன்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் போதைப்பொருட்களை பதுக்கிவைத்திருந்த நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-குமார்



திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் பங்குனி தேர் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

-கதிரவன்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள அருள்மிகு ராஜகோபாலஸ்வாமி கோவில் பங்குனி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது.

-விஜயகுமார்

நாகை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு. ஆகாஷ் தலைமையில் இன்று நடைபெற்றது.

-செ.ஜெபராஜ்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டுப் பணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

-சிவகுமார்

03 04 2025 6 30 மாவட்டச் செய்திகள்-3

**(c/o)**

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுக்கான நலவாரியத்தின் அடையாள அட்டைகளை மேயர் திருமதி பிரியா வழங்கினார்.

-செ.கு

சென்னை சென்ட்ரல் - ஹவுரா இடையேயான அதிவிரைவு ரயில் இன்றிரவு 7 மணிக்கு பதிலாக மணி 8.20க்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**(c/o)**

கார் - சி - 19

03 04 2025 6 30 விளையாட்டுச் செய்திகள்-1

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Manish Rathore, Abhinash Jamwal** மற்றும் **Hitesh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பிரேசிலில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Manish Rathore**-ம், 65 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Abhinash Jamwal**–யும் 70 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Hitesh**–ம் வெற்றிபெற்றனர்.

-------------------

**Manchester** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**(c/o)**ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 9-11, 11-1, 11-2, 11-9 என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் **Daniel Poleshchuk**–ஐ வென்றார். **(c/o)**

--------------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்மணன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

03 04 2025 6 30 விளையாட்டுச் செய்திகள்-2

**(c/o)** முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 7-5, 6-2 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Nicholas Adesalu**–ஐ வென்றார்.

**(c/o)**

கார் - சி ஏர்நெட் / 14